**பாரிய கொழும்பு நீர் புனரமைப்புச் செயற்திட்டம் - 2014**

-----------------------------------------------------------------------------------

பாரிய கொழும்பு நீர் புனரமைப்புச் செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் தேசிய நிர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையேயான 2008 செப்டெம்பர் 03 ஆந் திகதிய எஸ்எல்-பீ 90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையினது 4.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் (ஜேஐசீஏ) என அழைக்கப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி (ஜேபிஐசீ) க்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையேயான 2007 மார்ச் 28 ஆந் திகதிய எஸ்எல் - பீ 90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர்கள் ஆகும். தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். புதிய அலுவலகக் கட்டிடத் தொகுதி ஒன்றையும் புதிய நீர்த் தடாகம் ஒன்றையும் மாளிகாகந்தையில் நிர்மாணித்து, கொழும்பு நகரிலும் கொட்டிகாவத்தை – முல்லேரியாவ பகுதியிலும் நீர் வழங்கலை புனரமைப்பதும் அதிகரிப்பதும், எலிஹவுசில் நீர்த்தடாகம் ஒன்றை நிர்மாணிப்பதும், கொட்டிகாவத்தையிலும் முல்லேரியாவிலும் நீர்வழங்கல் முறைமையை முன்னேற்றமடையச் செய்வதும் கொழும்பில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடியிருப்புத் தோட்டங்களில் நீர் வழங்கலுக்கான இணைப்புகளை ஏற்படுத்துவதுமே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைப் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 4,785 மில்லியனுக்கு நிகரான 5,359 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். இதில் ரூபா 3,549 மில்லியனுக்கு நிகரான 74.18 சதவீதத்தைக் குறிக்கும் 3,975 மில்லியன் ஜப்பானிய யென்னை ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் வழங்குவதற்கு உடன்பாடாகியதுடன் எஞ்சிய ரூபா 1,236 மில்லியனுக்கு நிகரான 25.82 சதவீதத்தைக் குறிக்கும் 1,384 மில்லியன் ஜப்பானிய யென்னை இலங்கை அரசாங்கம் வழங்குவதற்கு உடன்பாடாகியது. 2007 நவம்பர் 27 அன்று தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2012 ஜனவரி மாதமளவில் அதனை நிறைவு செய்யவிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2015 செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து

செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், கட்டு நிதி நிதியக் கணக்குகளிலிருந்து பற்றுதல்கள், அதற்கான மீளளிப்புகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் செயற்த்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்களிலும் ஏடுகளிலும் காட்டப்பட்டுள்ளனவா என்பதும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி இலங்கை மத்திய வங்கியினது அத்தினத்தில் உள்ளவாறான கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்து

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிப்பதற்கு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், கட்டு நிதி நிதியக் கணக்குகளிலிருந்து பற்றுதல்கள், அதற்கான மீளளிப்புகள் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் செயற்த்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்களிலும் ஏடுகளிலும் காட்டப்பட்டுள்ளனவா என்பதும், 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி இலங்கை மத்திய வங்கியினது அத்தினத்தில் உள்ளவாறான கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

நிதி, திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பீ/ஈஆர்டீ/2007/2 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 மார்ச் 31 க்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்கள் 2015 ஜுலை 14 அன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பொதுத் திறைசேரியால் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக அறவிடப்பட்ட ரூபா 252.2 மில்லியன் வட்டியானது நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 400.51 மில்லியன் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்ற உதவு தொகைக்கு எதிரே எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது செயற்திட்டத்தால் மற்றும்மொரு செயற்திட்டத்திற்கெனக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 172.07 மில்லியன் உசாத்துணைக் கட்டணமானது இச் செயற்திட்டத்தின் நடைபெறும் வேலையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டம் கொள்வனவு செய்த நிலையான சொத்துக்கள் உள்ளதை உறுதி செய்வதற்கான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று செயற்திட்டத்தால் பேணப்படவில்லை

(ஆ) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஊழியர்கள் பணிக்கொடைக்கு உரித்துடையவராவர். எவ்வாறாயினும், இத் தேவைக்கேற்பச் செயற்திட்டம் செயற்படாததுடன் நிதிசார் கூற்றுக்களில் நிதியேற்பாட்டை மேற்கொள்ளவும் இல்லை.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்ட நிதியேற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் மற்றும் 2014 டிசெம்பர் 31 வரை உள்ளவாறான நிதி பயன்பாடு என்பவற்றினது சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | | | | பயன்படுத்தப்பட்ட நிதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தோற்றுவாய்** | **கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை** | | **மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு** | | **மீளாய்வாண்டின் போது** | | **2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
| | **ஜப்பானிய யென் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஜப்பானிய யென் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஜப்பானிய யென் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஜப்பானிய யென் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஜேஐசீஏ | 3,975 | 3,549 | 331.15 | 400 | 297.81 | 359.74 | 2,623.79 | 3,528.26 |
| இலங்கை அரசாங்கம் | 1,384 | 1,236 | 82.79 | 100 | 82.72 | 99.92 | 741.05 | 996.49 |
| மொத்தம் | 5,359 | 4,785 | 413.94 | 500 | 380.53 | 459.66 | 3,364.84 | 4,524.75 |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கையின் ஆரம்பத்திலிருந்து 8 ஆண்டு முடிவின் பின்னர் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் கடன் பெறுகைகளின் 56 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, செயற்திட்டத்தின் எஞ்சிய 09 மாத காலத்துள் கடன் பெறுகையின் எஞ்சிய 1,341 மில்லியன் ஜப்பானிய யென் பயன்படுத்தப்படமுடியுமா என்பது சந்தேகத்திற்குரியது.

### 3.2 பௌதிக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மாளிகாகந்தையில் உள்ள அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலை, கொத்தடுவை – முல்லேரியா – கொட்டிகாவத்தை பிரதேசங்களில் நீர் வழங்கலுக்கான வலைப்பின்னலை வழங்கி அதனை நிறுவுதல் மற்றும் எலி ஹவுஸ் நீர்த்தடாகத்தை மீள நிர்மாணித்தல் என்பன 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்ததுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்குப் பொருத்தமான காணிகளை வழங்குவதில் கொழும்பு மாநகர சபையால் ஏற்பட்ட தாமதம் காரணமாக வீதிகளது புனரமைப்பு, வாகனத் தரிப்பிடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள், சூழலை அழகுபடுத்தும் நடவடிக்கைகள், தடுப்புச் சுவர்களை அமைத்தல் மற்றும் களஞ்சியச்சாலைகளுக்கு வேலியமைத்தல் போன்ற வேலைகள் என்பன பூர்த்தி செய்யப்படாதிருந்தது.

(ஆ) கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தபோதும், மாளிகாகந்தை வேல்வ் ஹவுஸ் நிர்மாண வேலையானது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2015 ஆகஸ்ட் 14 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தது. இதன் விளைவாக, ரூபா 275.09

மில்லியன் கிரயத்தில் 2014 ஆம் ஆண்டு முடிவில் நிறைவு பெற்றிருந்த மாளிகாகந்தை நீர்த்தடாகம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(இ) பௌதீக இலக்குகளை உள்ளடக்கியவாறு செயற்திட்டத்தால் விரிவான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், வேலைகளைத் திசை திருப்புதல் மற்றும் அதன் பொருட்டு தேவைப்படும் நிவாரண நடவடிக்கைகள் என்பவற்றை இனங் காண்பதற்கான அமைப்பு அறிமுகஞ் செய்து வைக்கப்படாமையால் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாக செயல் திட்டம் பயன்படுத்தப்படவில்லை என உணரப்பட்டது.

### 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தனது நிர்வாக வேலைகளுக்குத் தேவையான பதவியணியைச் செயற்திட்டம் ஆட்சேர்த்திருந்தபோதும், செயற்திட்டப் பதவியணிக்காக ஊதியக் கணிப்பை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையே மேற்கொண்டு அதன் பொருட்டு 20 சதவீத மேந்தலையைச் செயற்திட்டத்திடமிருந்து பெறுவது வழமையாகவிருந்தது. 2014 டிசெம்பர் 31 வரை தேசிய நிர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ரூபா 77.11 மில்லியன் மேந்தலைக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) கொத்தடுவ பிரதேசத்தில் நீர்க்கோபுரம் ஒன்றையும் அலுவலகக் கட்டிடம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்குக் குத்தகை அடிப்படையில் கொலன்னாவ பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட காணிக்கு செயற்திட்டத்தால் 2014 டிசெம்பர் 31 வரை ரூபா 2.31 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதேச செயலாளருடன் குத்தகை உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கையை செயற்திட்டம் மேற்கொள்ளவில்லை.

### 3.4 நிதிசார் கட்டுப்பாட்டு விடயங்கள்

---------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினது 2010 ஜுலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றால் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை.